THE GARDEN OF THE HEART.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
3-MAY 1913
MADRAS

இதய சிங்கார வனம்

AN ANGLO-VERNACULAR MAGAZINE FOR WOMEN AND GIRLS.

July, 1912.

CONTENTS.

To our Readers - THE EDITOR
Her Majesty Queen Alexandra MISS PARSLEE.
A Talk about the Stars MR. J. HARVEY.
A True Mother and what she can do MISS E. LAKSHMI GOREH.
Some Lessons from the Divine Teacher.
Needlework Patterns.
A Simple Narrow Edging.
A Knitted Scarf.
The Garden of Souls MISS A. HARVEY.

WOMEN'S AUXILIARY OF THE C.L.S. FOR INDIA,
35, John Street, Bedford Row, London, W.C.

இந்திய ஸ்திரீகளுக்கான பத்திரிகை

இதய சிங்கார வனம்

தீவர் என்ற கன்னிகா பெருமாட்டியால் நடைபெறுவது

வயது I — ஜூலை 1912 — இலக்கம் 3

நம் பத்திரிகையைப் படிக்கிறவர்களுக்கு

என் பிரியைகளே,

நம் பூங்காவில் உலாவுகிறவர்கள் தொகை அதிகரித்துக்கொண்டே யிருப்பதவசியமாகையால் அதனுள் இப்போது முதன்முறை வந்தவர்களிருப்பார்கள். அப்படி வந்திருக்கிறவர்கள் பறித்து ஆனந்தப்படுவதற்குப் பல புஷ்பங்களிந்தச் சந்தாவிலும் அகப்படும். ஆரம்பத்திலிருந்தே இந்தக் காவினை அறிந்தவர்கள், முந்தின சந்தாக்களில் வந்தவைகளையும் ஞாபகத்தில் வைத்து மகிழுவார்கள். முதல் சஞ்சிகை வெளிவந்தபோது உங்களுடன் உலாவி, அந்திக்காற்று, கிணற்றிலிட்ட நீருருட்டு சக்கிரம், ரோஜாப் பரிமளம், விண்மீன்களின் மினுக்கு, இவற்றைப்பற்றிக் கேட்கக் கேட்க ஆனந்தம் அடங்காமல் பேசவல்ல ஒரு அன்பினள் இருந்தாள்.

இந்தச் சஞ்சிகைப் பூங்காவனத்திலும் பார்க்க இனிய பல இருக்கும். ஆயினும் நாம் உலாவப்போகின்ற ஆரம்பத்தில் அவை நம் கண்ணுக்கு அகப்படா. காரணம் நாம் ஒரு காரிருளைக் கடந்து செல்லவேண்டியதேயாம். அது மரணக்காரிருள்.

நம்முடன் நடந்து புஷ்பங்கள், பத்திரங்கள் இவற்றில் நமக்குத் தெரியாமல் மறைந்திருந்த பாடங்களை நமக்கு வெளிப்படக் காட்டின அன்புச் சகோதரி நம்மைவிட்டு எடுக்கப்பட்டு, இப்போது தேவனுடைய திருக்காவில் தேவதாஸர் கூட்டத்தில் சேர்ந்துவிட்டாள். அவளை நாம் இனிப் பார்க்கவும் அவள் பேச்சை இனிக் கேட்கவும் மாட்டோம். ஆயினும், அவளுடைய நினைவு நம்மைவிட்டு மாறாது. ஏனென்றால், நம்மைச் சதா பார்த்து, நேசித்து, உருகுகிற நம் பரமபிதாவிடத்தில் அவள் இருக்கிறாள்.

துக்க இருள் மூடினதாயினும், நம் பூங்காவில் தேவலோகத்துப் பிரபை ஜொலிக்கிற நறுமணப் பூக்களை நாம் தேடிப் பறிக்கவேண்டும் என்பது அவளுடைய விருப்பம். அந்த விருப்பத்தின்படி செய்வது நம் கடமை. வீட்டைவிட்டு வெளியேறி ரோஜாமலர் கொய்ய விரும்பினாலும் வழக்கக்கட்டினால் தடுக்கப்படுகிற சகல மாது சிரோன்மணிகளுக்கும் நம் பத்திரிகை எளிதில் கிடைக்கவேண்டும் என்பது உவாட்டன் மிசியின் மனோரதம். ஆயினும், இன்னும் வெகு பெண்ணரசிகளுக்கு நம் பத்திரிகை இருப்பதே தெரியாது. நம் பத்திரிகை நோக்கம் தவறாமல் வேலைசெய்வதற்கு நாம் அவரவர் தம் தமக்கு அறிமுகமான அரிவையர்களை வருந்தி அதை வாங்கும்படி தூண்டவேண்டும். இதுதான் நம் சகோதரி உங்களுக்குச் சொல்லச் சொன்ன அந்திய நேரத்து விருப்பம். அந்த விருப்பத்தை விநயத்துடன் நிறைவேற்றுவது கடன்.

'நம்மவர்களாகிய இராணிமார்' என்ற தலைவரியின்கீழ் நம் சக்கரவர்த்தியின் மாதாவாகிய அலெக்ஸாந்திரா இராணியாரின் சுருக்கச் சரித்திரம் இதில் வருகிறது. அது அந்த மகேஸ்வரி தாமே துக்க வெள்ளத்தில் மூழ்கினவராயினும், பிறருடைய துன்பத்தில் தேற்றவும் துக்கத்தில் ஆறுதல் கொடுக்கவும் தம் உள்ளத்தில் அமர்ந்த இடமுடையவராயிருக்கிறார் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டும்.

அந்த மாதா–ராணியாரின் விசுவாச மேன்மையை நாமும் பற்றி யொழுகி பிறர் துயரை நீக்கி நமக்குள்ள நன்மையைப் பிறருடன் பகிர்ந்து அநுபவிக்க முயல்வோமானால், சகல இருளுங் கடந்து சந்தோஷப் பூங்காவை அடைவோம். உங்களுக்குச் சகல நலமும் கோருகிற உங்கள் நேச பிரியை,

பத்திரிகையாசிரியை.

The Garden of the Heart.

Edited by Miss Dewar.

VOL. I. JULY, 1912. No. 3.

To our Readers.

Dear Sisters—

As our company should be an ever-increasing one, there will be some of you who have come into our "Garden" for the first time. You will find there much to look at, and no doubt there will be a flower here and there that you will wish to gather and take away. To those who have seen it from the beginning, when the walks were first laid out, there will be the added pleasure of memory. You will recall the first days of meeting in the early spring—the cool wind of evening—the drip of the water wheel at the well—the scent of the rose—and the shining of the stars—while a dear friend talked with you about the wonderful lessons to be learned from them.

We shall find many beautiful things in our "Garden" still, but it will not be possible to see them at first, for we must, during our walk, pass through a dark shadow—the shadow of death.

Our beloved sister who used to walk with us, and who opened out the precious truths hidden in the leaves and flowers, has been taken from us, and is now one of the blessed ones in the Garden of God. We cannot see her any more, nor hear her voice, but her thoughts are ever with us, for she is with our Father in Heaven, Who sees and loves and cares for us.

It would be her wish that we should, even in the shadows of our Garden of Sorrow, seek for the bright flowers of heaven, so we must do this for her sake. We must invite others also, for it was Miss Wauton's desire that our Magazine should be as a rose-garden to all the ladies who may not go out to find flowers for themselves, and, as yet, many have not even heard of it. Her last request was that, in order to make it succeed, we should try to get every lady we know to have her name put on the list of regular subscribers. A last wish is sacred. Let us fulfil it!

A sketch of our Gracious Queen-Mother Alexandra is given under the title of "Our Own Queens." It shows how her Majesty, although knowing sorrow to the full, has yet a heart at leisure to soothe and sympathize. Shall we not follow our Queen-Mother's faith in this by doing what we can for others; and by sharing our good things with them—our fruits and our flowers—we shall find beyond all the Shadows the Garden of Joy.

With all best wishes,

Your affectionate friend,

THE EDITOR.

Her Majesty Queen Alexandra.

QUEEN ALEXANDRA was born at Copenhagen on the 1st of December, 1844. She was the eldest daughter of the Prince and Princess Christian, afterwards King and Queen of Denmark, and had two brothers and two sisters, with whom she spent a very happy childhood. The princesses were taught not only to excel in music and painting and to acquire foreign languages, but also to sew and make garments for the poor. One day the three sisters were telling each other what they most desired. Princess Thyra said she would like to be very clever and accomplished; Princess Dagmar wished to have great power and influence, that she might do good to others; but the Princess Alexandra said her greatest desire was to be *loved*—and that desire has certainly been granted.

Her Majesty Queen Alexandra, now "The Queen Mother."

In 1862 the Princess was betrothed to the Prince of Wales, afterwards our King Edward VII, and all the English people were delighted, for she was said to be the most beautiful Princess in Europe and as good as she was fair. Her Royal Highness left Denmark in February, 1863, and came to England to be married. On her arrival she was met by the Prince of Wales, and, as they landed, sixty girls strewed flowers in their way, and when they drove through London the streets were gaily decorated, and enormous crowds of people welcomed the lovely bride. The wedding took place on the 10th of March, 1863, and the Princess Alexandra soon gained the love and devotion of all her future subjects.

In course of time three sons and three daughters were born to the Prince and Princess of Wales, and, like other parents, they had their share of family sorrow as well as joy, for their youngest son did not live many days and the eldest died in 1892 shortly before the day which had been fixed for his marriage, so that our present King is now the only son living. All the children were brought up as their parents had been, to be useful men and women, and to be kind and thoughtful to everyone.

The Princess was always very fond of

MADRAS

அலெக்ஸாந்திரா மகாராணியார்

இவர் கொப்பனுகன் நகரில் 1844-ம் ௵ டிசெம்பர்௴ 1௳ உதயமானவர். அவர் கிறிஸ்தியான் இளவரசரின் ஜேஷ்ட புத்திரி. அவ்விளவரசரே பிறகு டென்மார்க்கு தேச அரசரானுர். அலெக்ஸாந்திரா ராஜபுதல்வி இரண்டு சகோதரருடனும் இரண்டு சகோதரிகளுடனும் பிறந்தவர். அவர்களுடைய கூட்டுறவில் அவருடைய இளமைப்பிராயம் சந்தோஷமாய் நடைபெற்றது. இந்த இராஜபுத்திரிகளுக்கு ஓவியம், சங்கீதம், பரபாஷை விற்பன்னம், இவற்றில் ஓங்கிய பாண்டித்தியம் வரக் கல்வி பயிற்றப்பட்டதுமல்லாமல், மிடிவாயிலகப்பட்ட ஏழைகளுக்கு உடைசெய்து கொடுக்கும் தொழிலும் கற்பிக்கப்பட்டது. ஒருநாள் சகோதரிகள் மூவரும் தம் தம் உள்ளத்தில் இருந்ததை வெளியிட்டுக்கொண்டார்கள். தீரா என்ற ராஜகன்னி சகல கலைகளிலும் வித்தைகளிலும் விசேஷ பிரக்கியாதியடைய விரும்பினுர். இடகுமார் என்ற ராஜசெல்வி பிறருக்கு நன்மைசெய்வதற்கு எவ்வளவு அதிகாரமும் செல்வாக்கும் அடையலாகுமோ அவ்வளவும் அடைய விரும்பினுர். அலெக்ஸாந்திரா என்ற ராஜபுதல்வி பிறரால் நேசிக்கப்படுதலே தாம் தேடும் தேட்டம் என்றுர். இதை அவர் தேடியவாறே அடைந்தார்.

1862-ம் ஆண்டில் அவர் ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தி எனப் பின்னர் நமக்கு அரசரான உவேல்ஸ் இளவரசருக்குப் பெண் பேசப்பட்டு நிச்சயம் செய்யப்பெற்றுர். அவர் ஐரோப்பா முழுமையிலும் இணையில்லாக் கட்டழகி எனவும் நற்குணம் குடிவாழும் திருவனையார் எனவும் பெயர் வாங்கியிருந்ததினுல் இந்த மணச்சம்பந்தம் ஆங்கிலர் அனைவருக்கும் பேருவப்பாயிருந்தது. 1863-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் அவர் டென்மார்க்கிலிருந்து புறப்பட்டு இங்கிலாந்துக்கு வந்தார். அப்போது அவருக்குத் திருமணங் கூடியிருந்தது. உவேல்ஸ் இளவரசர் அவரை வரவேற்று அழைத்து வரப் புறப்பட்டார். தம்பதிகள் இருவரும் கப்பலிலிருந்து கரையிறங்கினவுடனே அறுபது கன்னிப் பெண்கள் அவர்கள் போன பாட்டையில் மலர் தெளித்தார்கள். அவர்கள் லண்டன் மகா நகரில் ரதமூர்ந்து செல்லும்போது வீதிகள் திருக்கோலம் செய்யப்பட்டிருந்தன. கணக்கில்லாத ஜனங்கள் ராஜபுதல்விக்கு மங்கள வரவு கோஷித்தார்கள். 1863-ம் ௵ மார்ச்சு௴ 10௳யில் திருவிவாகம் சிறப்பாய் முற்றியது. தீவிரமாக அலெக்ஸாந்திரா இளவரசியார் தம் பின்னிட்ட காலத்துப் பிரசைகளின் அன்பையும் ராஜபக்தியையும் சம்பாதித்துக்கொண்டார்.

காலக்கிரமத்தில் மூன்றுண்மக்களும் மூன்று பெண்மக்களும் இளவரசருக்கும் இளவரசிக்கும் பிறந்தார்கள். வேறு குடும்பங்களிற் போலவே அவர்கள் குடும்பத்திலும் சுகங்களைப்போலவே துக்கங்களும் நிகழ்ந்தன. கனிஷ்ட புத்திரன் பிறந்து சில நாட்களிலும் ஜேஷ்ட புத்திரன் 1892-ம் ஆண்டு அவருக்குக் குறிக்கப்பட்ட விவாக தினத்துக்கு முந்தியும் மரித்துப்போனுர்கள். நம்மைப் பரிபாலனம் செய்கிற 5-ம் ஜார்ஜ மன்னரே இப்போது அவர்களுக்கு ஆயுசுடன் மீந்த புதல்வர். இளவரசரின் பிள்ளைகள் அனைவரும் அவர்களுடைய பெற்றுரை யொப்ப பிறருக்கு உபயோகமான ஆடவர் ஸ்திரீகளாயும் யாவரிடத்தும் பட்சமும் இரக்கமும் பாராட்டுகிறவர்களாயும் வளர்க்கப்பட்டார்கள்.

இளவரசிக்கு மிருகங்கள்மேல் மிக உருக்கம் இருந்தது. ஒருவிசை ஒரு சிறுவன் ஒரு கழுதையை அக்கிரமமாய் அடித்ததைப் பொறுக்கமுடியாமல் அவனைத் தாமே தண்டித்துக் கண்டித்தார்.

1901-ம் ௵ விக்டோரியா மண்டலேஸ்வரி மரித்தபின் இளவரசரும் இளவரசியும் அரசரும் இராணியுமானுர்கள். இப்படிச் சிறப்படைந்தபின் தம் பெரிய செல்வாக்கை தம் பிரஜைகளுக்குப் பிரயோசனம் வரக் கையாடும் வகையை முன்னிலும் அதிகமாய் ஆலோசித்தார். எளியவர்களை அவர்களுடைய குடிசைகளிலும் நோயாளிகளை ஆஸ்பத்திரிகளிலும் சந்திப்பது அவருக்குப் பெரு வழக்கம். ஒருமுறை அவர் குழந்தைகளுடைய ஆஸ்பத்திரியைப் பார்க்கப் போனபோது ஒரு சிறு பெண் கிடந்த கட்டிலண்டை நின்றுர். அந்தச் சிறுமி மேல் நோக்கி அன்பும் உருக்கமும் உள்ள ஒரு அழகிய அம்மை தன் முகத்தினருகே குனிந்திருப்பதைப் பார்த்து அவரைக் கழுத்திறுகக் கட்டி முத்தம் செய்தாள். அந்தப் பிஞ்சுப் பெண்ணை அன்பாக வாரியெடுத்துத் தாமும் முத்தம்செய்து திரும்பக்

animals, and once herself punished a boy whom she saw ill-treating a donkey.

In 1901 Queen Victoria died, and the Prince of Wales ascended the throne. The Princess Alexandra now became Queen, but the change only made her more anxious to use her influence for the good of her subjects. She frequently visited the poor in their own homes, and the sick people in the hospitals. On one occasion, when visiting a children's hospital, she stopped at the bedside of a little girl. The child looked up, and seeing a beautiful lady bending over her with love and pity in her eyes, she threw her arms round her neck and kissed her. The Queen's eyes were full of tears as she returned the caress and laid the child once more on her pillow. Her Majesty has been known to leave her Palace at ten or eleven o'clock at night in order to visit some of her servants or poor neighbours who were sick or in trouble. Once, when her husband, then Prince of Wales, was very seriously ill, she still found time every day to visit a stable-boy who was suffering from the same disease. Well may all her people love such a sweet and gentle Queen!

In 1910 King Edward died, after reigning for nine years only, and Queen Alexandra was left a widow. But in the midst of her sorrow the broken-hearted Queen thought of her subjects. She wrote them a beautiful letter, thanking them for their sympathy and asking them to extend the love and loyalty which they had always shewn to King Edward and herself to her dear son who would now be their King.

Queen Alexandra has never done anything very great or wonderful, but she has set an example which all women can follow of loving service and thoughtfulness for others. Wherever she goes her friends and neighbours are better and happier for her presence, and it is said that she has never been heard to say an unkind word about anyone.

We, too, may each try in our small way to help and comfort those around us, for such ministry is well-pleasing to God. We shall pass through this world but once. Let us then, like our gracious Queen Alexandra, do all the good we can *while* we can, and so by our love and sympathy help to brighten the lives of others.

A Talk about the Stars. Part III.

OUR last Talk brought us to the point that the whole sky is turning like a ball round the North and South Poles.

Now we shall return to consider the stars in the sun's belt again. As you have seen the belts to the north as well as to the south getting smaller and smaller until they end in the North Pole and the South Pole, you will, of course, understand that the belt of the sun which lies between these two is the largest. Well, you see the sun setting in the west, after which you see the stars coming out. Look to the place where the sun rose, that is, the east, and you will soon see some particular group of stars rising which you already know. It is quite easy to tell that, as these stars are in the east, and as the sun sets in the west, these stars must be in the opposite side to the sun, and yet that they are in the same belt as the sun, because they rise where he rose, and will set where he has set. Very well, two hours after you have seen the first group rise you will see a second group rise, and two hours after, another, and so on, until after the twelfth has passed, when at almost exactly the same time as you saw the first group the night before rising in the east, you will see it there again the next night. How did there happen to be twelve groups exactly in this belt so that they take twenty-four hours to go round? Well, when the clever people of old times noticed that after twelve months exactly the same group

கட்டிலில் கிடத்தினபோது இராணியாருடைய கண்களில் மலமலவென்று கண்ணீர் வழிந்தது. இரவில் பத்துப் பதினொரு மணிக்குக் கிளம்பி வியாதிப்பட்டோ வேறு வகையாலோ துயரடைந்திருந்த தம் ஊழியர்களையாவது அக்கம்பக்கத்தாரையாவது பார்த்து வேண்டும் உதவிபுரிய மகாராணியார் அடிக்கடி போகிற வழக்கம் பலருக்கும் தெரிந்த விஷயம். தம் கணவனார் ஒருமுறை அபாய வியாதிப்பட்டிருந்த காலத்தில் அதே வியாதியால் வருந்தின தம் குதிரை-பிடிக்கும் பையனைத் தினமும் சந்திக்க அவர் நேரம் ஒழித்து வைத்துக்கொண்டார். அந்த அன்புக்கரசியை அவருடைய பிரசைகள் கருப்பு விழிபோல் நேசிப்பது ஆச்சரியமல்ல. 1910-ம்௵ எட்வர்ட் மன்னர் மரித்ததால் மகாராணியார் வைதவ்வியமடைந்து மனம்நொந்து சஞ்சலதசையிலிருக்கும்போதுகூட அவர் தம் பிரசைகளை வார்ச்சலியத்துடன் நினைத்தார். அவர்களுக்கு ஒரு அன்பான கடிதம் எழுதி அதில் அவர்கள் தமக்கும் எட்வர்ட் மன்னருக்கும் பாராட்டின இராஜபக்தியை இனி அவர்களை ஆளத்துவக்கின தம் புத்திரசிகாமணிக்குப் பாராட்டும்படி வேண்டினார்.

அலெக்ஸாந்திரா மகாராணியார் ஏதோ பிரமாதமான கிரியை செய்தவர் என்று பெயரெடுக்காவிட்டாலும் பிறருக்கு உருக்கம் பாராட்டி அவர்களுடைய ஆபத்திற்கு உதவுகிறவர் என்கிற சிறப்பையடைந்திருக்கிறார். அதில் மாதரார் யாவரும் அவர் மாதிரியை அனுசரிக்கலாம். அவர் போகிற இடத்திலெல்லாம் அவருடைய பிரசன்னம் யாவரையும் இன்பமுகமுள்ளவர்களாக்குகிறது. நாமும் நம்மைச் சூழ்ந்து அவதிப்படுவோருக்கு உதவப் பழகினால், அது தேவனுக்குப் பிரீதியாயிருக்கும். இந்தப் பூவுலகின் வழியாய் நாம் ஒருவிசைமாத்திரமே செல்லலாகும். குணரத்தினமாகிய நம் அலெக்ஸாந்திரா மகாராணியாரைப்போல் நமக்கு இயன்ற சகல நன்மையும் பிறருக்குச் செய்து நம் அன்பினாலும் உருக்கத்தினாலும் அவர்களுடைய வாழ்நாளைப் பிரகாசமடைவிப்போமாக.

நக்ஷத்திரங்களைப்பற்றிய சல்லாபம். பாகம் III

நம் முந்தின சல்லாபத்தில் ஆகாயமண்டலம் முழுமையும் வட-தென் துருவங்களைச் சுற்றி ஒரு பந்துபோல் உருளுகின்றது எனப் பார்த்தோம். இந்த முறை நம் சூரியனுடைய வட்டையில் இருக்கிற விண்மீன்களைப்பற்றிப் பார்ப்போம். வடக்குப்புறமும் தெற்குப்புறமும் போகப் போக வட்டைகள் சிறுத்துக்கொண்டே போகிறது உங்களுக்குத் தெரியும். அவ்விரண்டிற்கும் இடையிலிருக்கிற சூரியனுடைய வட்டை எல்லாவற்றிலும் பெரிது. இதுவும் உங்களுக்குத் தெரிந்ததே. சூரியன் மேற்கே விழுந்தவுடனே வான்மீன்கள் தோற்றமாகின்றன. சூரியன் உதிக்கிற கிழக்குத்திசையைப் பார். அங்கே ஒரு பழக்கமான நட்சத்திரக் கூட்டம் தெரியும். சூரியன் மேற்கேயும் இந்த மீன்கூட்டம் கிழக்கேயும் இருப்பதினால் அதுவும் அவையும் ஒன்றுக்கொன்று எதிர்ப்பக்கத்தில் இருக்கின்றன என்று சொல்லவேண்டியதில்லை. ஆயினும், அந்தச் சூரியன் உதித்த இடத்திலேயே அவையும் உதிக்கிறதையும் அது அடங்குகிற இடத்திலேயே அவையும் அஸ்தமிக்கிறதையும் பார்க்கும்போது அதுவும் அவையும் ஒரே கச்சையிலேயே இருக்கிறது என்று அனுமானிப்பேர்ம். அந்த அனுமானம் சரியே. அந்த முந்தின மீன்ராசி உதயமானதற்கு இரண்டுமணிநேரம் பொறுத்து இரண்டாவது ஒரு மீன்ராசி எழும்பிவரும். இன்னும் இரண்டுமணிநேரத்திற்குப்பின் இன்னொரு ராசி வரும். இப்படியே ராசிக்குப்பின் ராசி வந்துகொண்டிருக்கும். இப்படி பன்னிரண்டு ராசி வரும். பன்னிரண்டாவது மறைந்தவுடனே, மறுநாள் இரவில் அதற்கு முந்தின இரவில் எந்நேரத்திலே முதல் ராசியைப் பார்த்தாயோ அந்நேரத்திலேயே அதைத் திரும்பப் பார்ப்பாய்? இந்த வட்டையில் பன்னிரண்டு ராசிகள் இருக்க நேர்ந்தது எப்படி? அவை ஒரு சுழல் சுழல 24 மணிநேரம் பிடிக்கிறதேன்? பூர்வத்திலிருந்த 'புத்திசாலிகள் 12 மாதங்களானபின் அதே ராசி நட்சத்திரங்கள் அதே இடத்திலும் அதே நேரத்திலும் தோன்றினதைப் பார்த்து: சூரியனுடைய இந்த வட்டையை 12 பாகங்களாகப் பிரிப்போம். ஏன் இப்படிப் பிரிப்போம் என்றால், அந்த முழுவட்டையும் 24 மணிநேரத்தில் ஒரு சுழற்சி சுழல்வதுமன்றி ஒவ்வொரு வருஷத்திலும் அதே இடத்திலேயும் அதே நேரத்திலும் தோன்றுகிறபடியினாலேதான். இப்படிப் பிரித்தால் மாதத்துக்கு ஒரு

of stars came up at exactly the same place and the same hour as the year before, they said, "Let us divide this sun's belt into twelve parts, each of which we observe coming up two hours after the other, because the whole belt has not only moved round once in every twenty-four hours, but also because we notice the same groups rise every year at exactly the same time, and that will give us a group for every month, so that we can always know the month by the stars as well as the stars by the month." But the sun is in one of these groups, of course, because the belt is his path, and yet those clever men of old were sharp enough to notice that he was not always in the same group, but in a different one every month, though he was actually in the same group every year at exactly the same time. How did they find this out when no one can see the groups of stars that the sun is in? In this way. You can see for yourself that a certain group of stars is rising, let us say, at 9 o'clock in the evening, and you therefore know that the sun has set at the opposite side more than half his belt in front, and will appear next morning less than half his belt behind this group. But each night you will notice that the group which rises at 9 this evening, will rise four minutes earlier to-morrow evening. This goes on every day, each group rising four minutes earlier, and if you reckon thirty days to a month, it means that the group which you saw rise at 9 p.m. on the 1st, will have been one hundred and twenty minutes or two hours, up, by the 1st of the next month at the same time. And still as the sun had set half his belt in front of the first group you saw, he will set half his belt in front of the succeeding group also, and will in this way be in a different group every month. So that although you cannot see the stars in the day-time, you can always tell what group he is in of the twelve according to what month it is of the year. For instance, if you see a group of stars in the sun's belt rising in the east in the evening after the sun has set in the west, say on the 18th March, you simply say that though you may not know what group he is in, he is certainly half his belt in front of the group you see rising. You observe a new group every month rising at the same time, and you know that the sun is half his belt in front still, till on the 18th of September, after six months have passed, you will see the seventh group rise, and you know that the sun must be in the sixth group away from you or half his belt of twelve months before you, and that, therefore, the group he is in must be the same one that you saw rising on the 18th March. And you can also prove that again on the 18th March he will be in the same group again.

Next time we shall call each of these twelve groups in the sun's belt by their names, and this will be a new and very interesting subject for our talks together about the Stars.

A True Mother, and what she can do.

(Concluded.)

A MOTHER'S love is the most beautiful thing on earth. Many Indian mothers think that English mothers cannot really love their children when they hear of their sending them away from them to England for their health or for their education. But this is the very strongest proof that they do love them, inasmuch as they are willing to bear the pain of parting from them for their good. Love prompts you in your care for the bodies of your children, and ambition in that of their minds, but what are you doing towards the formation of their character, without which neither health nor wealth can be of any lasting benefit, either to the individual or to society?

When to begin the training of a child. How soon can a mother begin the work of forming

பாகம் வரும். அதினல், அந்தந்தப் பாகத்து நட்சத்திர ராசியைக்கொண்டு எந்த மாதம் இது என்று அறியலாகும். தவிர, மாதமின்னது என்றவுடனே அதின் ராசி இன்னது என்றும் தெரியலாகும்' என்று நினைத்தார்கள். இந்த வட்டை சூரியனுடைய பாதையாகையால் அதில் சூரியன் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசியில் இருக்கிறதையும் அந்தப் பூர்வ புத்திசாலிகள் அறிந்துகொண்டார்கள். மேலும் ஒரு வருஷம் எந்தத் தேதியில் எந்த ராசியில் சூரியன் இருந்ததோ அந்தத் தேதியில் அதே ராசியில் எந்த வருஷத்தை எடுத்தாலும் சூரியன் இருந்ததும் அவர்களுக்குத் தெரியும். சூரியன் குடியிருக்கிற ராசி எது என்று யாவர் கண்ணுக்கும் அகப்படாதிருக்கையில், இதெல்லாம் அவர்களுக்கு எப்படித் தெரியவந்தது? பின்வருமாறு. ஒரு ராசி இன்று இரவு 9 மணிக்குக் கிழக்கே உதயம் செய்கிறதை நீ பார்க்கிருய் என்று வைப்போம். அந்த ராசிக்கு முன்னுள்ள பக்கமாகிய மேற்கில் தன் வட்டையின் சரிபாதிக்குச் சற்று அதிக தூரத்தில் சூரியன் அஸ்தமித்திருக்கிறது என்று நீயே நிதானிப்பாய். மறுநாள் காலையில் சூரியன் தன் வட்டையின் சரிபாதிக்குச் சற்றுக் குறைவான தூரத்தில் அந்த ராசிக்குப் பின்பக்கத்தில் உதயமாகும் என்றும் நீயே நினைத்தல் கூடும். நீ ராசிகளின் தோற்றக் காலத்தைக் கவனித்தால் இன்றிரவு 9 மணிக்கு உதயம் செய்த ராசி நாளை 4 நிமிஷங்களுக்கு முன்னுறவே உதயமாகும். இப்படித் தினத்துக்குத் தினம் 4 நிமிஷம் முந்தியே உதயமாகும். அப்படியே ஒவ்வொரு ராசியும் செய்யும். ஒரு மாதம் 30 நாள் என்று கணக்குவைத்தால் இந்த மாதம் 1௳ 9 மணிக்கு உதயம்செய்த ராசி அடுத்த௴ 1௳ 120 நிமிஷம் அதாவது 2 மணிநேரம் முந்தியே உதித்து எழும்பியிருக்கும். இருந்தும், அந்த முந்தின ராசி உதித்தபோது சூரியன் அதற்கு முன்னுற தன் வட்டையில் பாதி தூரத்தில் அஸ்தமித்ததுபோலவே அடுத்த ராசி உதயம் செய்கையிலும் அதற்கு முன்னுறச் சூரியன் தன் வட்டையில் பாதி தூரத்தில் அஸ்தமிக்கும். அதினல் சூரியன் முன் குடியிருந்த ராசியைவிட்டு வேறொரு ராசியில் குடிவந்துவிட்டது தெரியும். இப்படி அது மாதத்திற்கு ஒரு ராசியில் குடியிருக்கும். இவ்வகையாய் பகலில் நட்சத்திரங்கள் தோன்ருத நேரத்திலும் மாதம் இன்னது என்று சொன்னவுடனே சூரியன் இன்ன ராசியில் இருக்கிறது என்று சொல்லலாம். திருஷ்டாந்தமாக, மார்ச்சு௴ 18௳ சூரியன் அடங்கினபின் ஒரு ராசி கிழக்கே உதயம் செய்கிறதைப் பார்க்கிருய். அப்போது சூரியன் எந்த ராசியில் இருக்கிறதென்று தெரியாவிட்டாலும், இந்த ராசிக்குமுன் பாதிவட்டைக்கு அப்பால் சூரியன் இருக்கிறதென்று நிதானிக்க முடியும். மாதத்துக்கு ஒரு ராசி கிழக்கே உதிக்கிறது உனக்குத் தெரியும். அப்படிப் புதிது புதிதாய் உதிக்கிற ராசி ஒவ்வொன்றுக்குமுன் தன் வட்டையில் பாதிக்கு அப்பால் சூரியன் அஸ்தமிக்கிறதை நினைவில் வைத்துக்கொண்டு, நீ மார்ச்சு௴ 18௳ உதிக்கப் பார்த்த ராசிக்கு 6 மாதங்களுக்குப் பின் செப்டெம்பர்௴ 18௳ ஏழாவது ராசி உதிக்கிறதைப் பார்ப்பாய். அப்போது இந்த 7-ம் ராசிக்கு முன்பக்கத்தில் நீ மார்ச்சு௴ 18௳ உதிக்கப் பார்த்த ராசி அஸ்தமிக்கும். அதுவே சூரியனுக்கும் அஸ்தமன திசையாகையால் சூரியன் அந்த அஸ்தமிக்கிற ஆரும் ராசியில் இருக்கிறது என்று நிதானித்துக்கொள்ளலாம். சூரிய வட்டைக்கு 12 மாதங் கணக்கேற்பட்டிருக்க, அதில் பாதி (இன்னமாதத்திலிருந்து இன்னமாதம்வரையும்) என்னவென்று தூக்கிப் பார்த்தால், சூரியனிருக்கிற ராசி இது என்று தெரியும். இப்படியே பார்த்துக்கொண்டுபோனல் இப்போது அதாவது, செப்டெம்பர்௴ 18௳ அந்த ராசியில் அஸ்தமிக்கிற சூரியன் அடுத்த மார்ச்சு௴ 18௳ அதே ராசியில் உதயமாகும் என்று ரூபிக்கலாம்.

வருகிற சந்தாவில் இந்த 12 ராசிக்கும் பெயர் குறித்து அவற்றைப்பற்றி மிக இன்பமான சல்லாபம் செய்வோம்.

உண்மையுள்ள தாய் தன் மக்களுக்குச் செய்யத்தக்கது

மாதா அன்பு நினைக்க நினைக்க இனிக்கும். ஆங்கில மாதாக்கள் தம பாலர்களைப் பிரித்து இங்கிலாந்துக்கு அவர்களுடைய கல்வி, சுகம், இவற்றின்பொருட்டு அனுப்பிப் பிரிவாற்றியிருப்பதைப் பார்த்து அந்தத் தாய்களுக்குப் பிள்ளைகள்மேல் பற்றில்லையாகும் என்று நம் பெண்கள் நினைக்கிருர்கள். தர்முள்ளம் வருந்தியும் தாம் பெற்ற பாலர்கள் பின்னிட்டுச் சுகமாயிருப்பதன்பொருட்டு அவர்

her child's character so that it may correspond to her high ideal? Well, she may begin even before it is born; as soon as ever she has hopes of becoming a mother. But how? First, by praying that her child may be under God's special protection and influence, and by being very careful of her own thoughts and words and actions, which all unconsciously affect her child.

Think of this, mothers! First, there is the great necessity for prayer; and, second, there is the great necessity for self control. Will you do this?

Can you not pray, "Oh, God, fill my child with Thy Holy Spirit, and give me grace to abstain from all that is evil"? You will then have God's help and guidance for the discipline of the day. A few details as to this will help you:—You must refrain from evil, angry, unkind, unclean thoughts; from using unclean, passionate, and abusive words; you must be true, honest, upright, in all your actions, remembering always the little life within you, and guarding it jealously from all that would taint or harm it. Strive to be bright and happy, contented and kind. Expectant mothers are often advised what to do or not to do before the birth of their child, but always in reference to its physical health. Is its spiritual health of less importance? Indeed no! Then begin to care for it even before it is born.

The mother of a certain great man used to go out into the fields and woods and fill her mind with beautiful thoughts for the sake of her unborn child.

Children frequently inherit the faults and failings and weaknesses as well as the diseases of their parents. If these faults and failings are overcome before the birth of the child, then there is more hope of its escaping the hereditary taint. The effort to control yourself will cost you a great deal of trouble and self-sacrifice; but if your love is true, surely you will undergo it. Do not be so unnatural as to grudge what it costs you. Even dumb animals, who are led only by their instincts, are capable of very great self-sacrifice for their young. How much more should not then a human being, with all reasoning faculties well developed?

This training of herself for the sake of the little one about to be born is of the greatest importance, and will make the training afterwards infinitely easier. The mother who has during those nine months trained herself will be on the watch for the slightest evil in the babe after its birth; her perception will be very keen, her love deepened, her power of self-sacrifice strengthened, and her prayers more insistent. She will receive her child fresh and pure from the very Hands of God, and will hear Him say, "Take this child away and nurse it for Me, and I will give thee thy wages." Think, oh think of your deep responsibility and obligation! This child is, after all, only lent to you for a time, it is not altogether and only your own property to do just what you like with. You will have to give an account of what you have done for it. Perhaps, it may be, that sometimes God calls away the little one from its mother's arms because He sees she is not, or is not going to be, true to her trust, and the little one is so precious to Him that He cannot allow it to be ruined by mismanagement. This is a very sad thought, is it not? But it may perhaps lead you to realize more fully how solemn a charge is committed to your care. Is it possible for you to be too solicitous? Can you ever spend too much time and thought over the formation of your little one's character? Is the time when you are expecting to be a mother a time to spend in slothfulness, idleness, selfishness, and foolishness? Rise, and take up your duties of motherhood at once! Pray unceasingly for the babe yet unborn. Guard your ears, your lips, your heart. Keep them clean and pure, and true. Then, if God in His tender mercy brings you safely through your time of pain and peril, and if He spares the little life to you, lay it in His Fatherly arms, and ask Him to teach you day by day how best

களுடைய பிரிவாற்றியிருப்பது அம்மாதாக்களின் உரமான அன்பைக் காட்டும். நீங்களும் உங்கள் பிள்ளைகளுடைய உடம்புச் சுகத்தைத் தேடும்போது அன்பு அதற்குக் காரணம் அல்லவா? அவ்வாறே அவர்களுடைய புத்தி விருத்திக்காக நீங்கள் கவலைப்படும்போது அவர்களுடைய பிற்கால க்ஷேமம் உங்களை அதற்குத் தூண்டும். ஆயினும், சிறப்பான ஒழுக்கம் அமையாவிடின் கல்வியும் சுகமும் பயன் படாவாகும்.

நல்லொழுக்கப் பாடம் பிள்ளைக்கு எப்போது ஆரம்பம் செய்யவேண்டும்? உள்ளவாறு சொன்னால் ஒரு மாது தான் தாயாகும் குறிகள் கண்டதும் மகப்பேறு உண்டாகும் முன்பே அதை ஆரம்பிக்க வேண்டும். தன் மகவு தேவனுடைய விசேஷ காபந்துள் இருக்கும்படி ஜெபிப்பதினாலும், தன் நினைவு பேச்சுச் செய்கைகளைப்பற்றிச் சாவதானமாயிருப்பதாலும் தாய் தன் பிள்ளையின் ஒழுக்கத்தை அது பிறக்குமுன்பே கவனிக்கலாம். தாயின் நினைவு பேச்சு நடத்தை அவள் கர்ப்பத்துச் சிசுவின்மேல் அதிகாரமுள்ளது. ஜெபம் முதல், தன்னடக்கம் இரண்டாவது; இவ்விரண்டும் நீங்கள் செய்யவேண்டியது: மறவாதீர்கள்.

'தேவனே, என் பிள்ளையை உம் ஆவியால் நிரப்பும், என்னைச் சகல பொல்லாப்பையும் விலக்கப் பயிற்றும்.' இப்படி ஜெபிக்கலாகாதா? அது செய்தால் நீங்கள் செய்யவேண்டிய கடமைக்குத் தேவ ஒத்தாசையும் ஆலோசனையும் உங்களுக்கு அகப்படும். தீயனவும் கோபமுள்ளனவும் கரேமானவும் அசுத்தமானவுமாகிய நினைவுகளை ஒழித்துவிடவேண்டும்; மனதைத் தீட்டாக்குவனவும் கோபாவேசமுள்ளனவும் தூஷணமானவுமான சொல்லையும் தவிர்க்கவேண்டும். வயிற்றுக்குழந்தையைத் தீட்டாக்குகிறதும் அதற்குச் சேதமுண்டாக்குகிறதுமாகிய எல்லாத்தையும் விலக்கி நீங்கள் செய்வதெல்லாவற்றிலும் உண்மையும் நேர்மையுமுள்ளவர்களாய் நடக்கவேண்டும். மேலும், மனத்திருப்தியும் மனமகிழ்ச்சியும் பட்சமுமுடையவர்களாயிருக்கப் பழகிக்கொள்ளுங்கள். மகப்பேறு எதிர்நோக்கும் மாதாக்களுக்கு இன்னது செய்யலாம் இன்னது செய்யலாகாது என்று அநுபவமுள்ளவர்கள் சொல்வது வழக்கம். அதெல்லாம் பிறக்கப்போகிற பிள்ளையின் சரீரத்திற்கு மாத்திரமே பிரயோசனமாய்ச் சொல்லப்படும். ஆத்துமா முக்கியமல்லவா? அதுவும் முக்கியமேயானால் அதற்குப் பிரயோசனமாகவும் செய்வதைச் செய். பிற்காலத்தில் பேரெடுத்தவராகிய ஒருவருடைய தாய் தன் பிள்ளை சுகமான பிள்ளையாய்ப் பிறக்கும்படி அடவியுள் உலாவி தன் மனதைச் சந்தோஷமாயிருக்கும்படி செய்துகொண்டாளாம்.

பாலர்கள் பெற்றோருடைய மனக்கேடுகளை மாத்திரமேயன்றிச் சரீரநோய்களையும் சுதந்தரிப்பார்கள். அவர்கள் பிறக்கும் முன்னரே பெற்றோர் இந்தத் தீமைகளைத் தவிர்த்துக்கொண்டால் அவர்களுடைய சந்ததிபாரம்பரியம் கறை தவிர்ந்திருக்கும். உங்கள் இச்சையை அடக்கி மட்டுப்படுத்துவது மிகக் கஷ்டமாகவே இருக்கும். ஆகிலும் உங்கள் சிசுக்கள்மேல் மெய்யன்பு உடையவர்களாயிருப்பீரேல், அவ்வகைக் கஷ்டங்களுக்கு அஞ்சீர்கள். உங்களைப்போல் செயற்கையறிவில்லாத இயற்கைப்பிராணிகள்கூடத் தம் சந்ததி சீர்கெடாதபடித் தம் இச்சையை அடக்கிவிட மிக வல்லனவாயிருக்கின்றன. புத்தியுள்ள நீங்கள் எவ்வளவதிகமாய் அப்படிச் செய்யவேண்டும்? அடக்க வேண்டிய காலத்தில் அடக்கவேண்டிய தீமைகளை அடக்கக் கற்பீரானால், பின்னர் உங்கள் பாலர்களை நல்லொழுக்கத்தில் பழக்குவது எளிதாகும். தன் கர்ப்பத்துச் சிசு கறைப்படாமல் காத்த மாதா அது பிறந்தபின் அதைத் தீமையணுகாமல் பயிற்ற வல்லவியாவாள். எது தீது என்று அவள் இயற்கையாகவே அறிவாள். அன்பினால் கட்டப்பட்டுத் தன் பிள்ளையின்பொருட்டுத் தான் எதை விலக்க வேண்டுமோ அதை உற்சாகமாய் விலக்குவாள். சோர்வில்லாமல் அவள் தன் பிள்ளைக்காக ஜெபிப்பாள். தன் பிள்ளை தன்னதல்ல தேவனது என்றும் தான் அதை வளர்க்க தேவனால் அமர்த்தப்பட்டதாதிமாத்திரமே என்றும் அவள் நினைப்பாள். நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக உத்தரவாதிகள் என்பதை மறக்காதீர்கள். உன் கைப்பாலகன் நீ உன் இஷ்டப்படி வைத்து விளையாட உனக்குக் கொடுக்கப்பட்டதில்லை. அது உன் நம்பிக்கைக்குச் சிலகாலம் ஒப்புவிக்கப்பட்டதே தவிர வேறல்ல. நீ தேவனுக்கு உன் பிள்ளை வளர்ப்பைப்பற்றி உத்தரவாதி. உன் பிள்ளை உன்னால் சீரழிகிறதையோ இனிச் சீரழியும் என்பதையோ பார்த்து தேவன் தாய் கையைவிட்டுப் பிள்ளையை அழைத்துக்கொள்ளுகிறதுண்டு. இது நினைக்கிறதற்குப் பரிதாபமாயிருக்கிறதல்லவா? நீ உன் உத்தரவாதத்தை நன்குணர்ந்து அதற்காகக் கொடுக்கத்தகும் சகல ஜாக்கிரதையையும் கொடுப்பது உன்னால் கூடாதா? உன் பிள்ளை குணசாலியாயிருக்க

to bring it up for Him; how best to lead the tiny feet in the way of purity, honesty, uprightness, unselfishness, and all those virtues which shall make a truly great and good man or woman, and one who will be a blessing in his, or her, day and generation.

Some Lessons from the Divine Teacher.

IN our last number you will find the Parable about the Seed. Those who have pondered over it will wish to hear another one, just as in the days when the Great Teacher was on earth multitudes used to gather round Him wishing to hear more of His wonderful words.

Amongst the throng there were all sorts of people. There were the rich in silk clothing and jewels, there were the poor in torn cotton garments. There were the sick and the sad, old men and little children. There were those who considered themselves better than others. And there were sinners who feared the judgment of men, but who were not afraid to come near and listen at the feet of the Great Master because He was so merciful and kind.

Some of those who thought that they had nothing to repent of did not like to sit beside the sinners; and when they saw that the Lord received them and taught them with gracious words, they were vexed, and said reproachfully, " This Man receiveth sinners."

He then spoke to them in a parable that has been the means of comfort and salvation to many a lost sinful soul.

The Parable is sometimes called The Story of the Lost Sheep. This is the scene of it. A shepherd had a flock of a hundred sheep, which he watched over with very tender care. One evening when he led the sheep into the fold he found one missing. Many would think that there was no use troubling about one when there were ninety-nine left, and someone would say, " Take your rest, it is night, and by this time the foolish creature may have strayed far away over the hills; and, who knows, perhaps the wolf has killed it ere now."

The shepherd looked at his flock safely gathered in and warm asleep. And he looked out into the darkness where the enemy of souls was searching and seeking for whom he could devour. And then he heard a cry, and knew that his own lost lamb was at the point of death. So he went out into the night and darkness; out to the verge of the hill, over which, if any man falleth, he perisheth. And there he found his lamb. At dawn he returned, clasping to his heart the little stray lamb.

How he rejoiced! He called in also his friends and neighbours to rejoice with him.

There can be no doubt that the story was told by our blessed Lord to reassure the anxious and suspicious hearts of all the sinful ones who came to Him. He knew how afraid they were, and so He showed to them in His beautiful picture the wonderful forgiveness of God. But in case any did not understand quite clearly He added a few words of explanation. He said: " I say unto you that likewise joy shall be in heaven over one sinner that repenteth, more than over ninety-nine just persons who need no repentance."

How glad the sinners must have been to hear of the forgiveness of sin, and how ashamed would the others be who had judged them; for whilst looking on the guilt of others, they had been blinded to their own sinfulness, and had not sought the gift of repentance from God. Our Lord had a very gracious message in this even for the proud and hard-hearted, and should there be any such amongst us, God grant that to them true repentance may be given, so that recognising themselves to be guilty, lost, and helpless, they will cry to the Shepherd of

விரும்பி நீ மாதாவாகு முன்னரே சோம்பலையும் தற்பொழிவையும் மூடத்தனத்தையும் தவிர்த்து ஒழுகுவது உனக்கு மிஞ்சின கஷ்டமாகுமா? உன் மாதாக்கடமையைச் செய்ய உடனே துவக்கி இன்னம் பிறக்காத உன் சிசுவுக்காக ஜெபி. உன் செவிகளையும் உதடுகளையும் உள்ளத்தையும் அசுத்தத்துக்கு விலக்கி அவைகளை மாசுமறுவில்லாத சுத்தமாய் வைத்துக்கொள். பிறகு, தேவன் உனக்குச் சுகப் பிரசவமும் உன் சிசுவுக்கு சுகஉயிரும் கொடுக்கக் கருணைவைத்தால் அதை நாள்தோறும் அவருக்கு உவப்புண்டாக வளர்க்கிற ஞானத்தை உனக்குத் தரும்படி அதை அவருடைய திருவடித்தானத்தில்வை. உன் பிள்ளையைத் துன்மார்க்கங்களுக்கு விலக்கி சகல சன்மார்க்கங்களிலும் உருப்படுத்தவும், அது வளர்ந்து சிறந்த ஒழுக்கசாலியாகி, தன் காலத்தில் மானிடஜீவர்களுக்கு நன்மையாய் பிழைக்க அநுக்கிரகம் செய்யவும் அவரிடத்தில் கேள்.

தெய்வ குரு சொன்ன சில உபதேசங்கள்

இதற்கு முந்தின சஞ்சிகையில் விதையைப் பற்றிய உவமை வந்தது. அதைச் சிந்தித்துப் படித்தவர்கள் இன்னொரு உவமை கேட்க விரும்புவார்கள். இப்படித்தான் அந்த மகா குரு பூலோகவாசம்செய்த காலத்தில் திரள் ஜனம் அவருடைய ஆச்சரியமான சொல்லைக் கேட்க வந்து அவரைச் சூழ்ந்தது. அப்படிச் சூழ்ந்தவர்களில் பட்டும் ஆபரணங்களும் அணிந்த செல்வர்கள் இருந்தார்கள், பருத்திக்கந்தை யுடுத்த எளியோர் இருந்தார்கள்; நோயால் வருந்தினவர்களும் இருந்தார்கள், கிழவரும் பாலரும் இருந்தார்கள். பிறரிலும் நாங்கள் நல்லோர் என நினைத்தவர்களையும் அங்கே பார்க்கலாம், பிறரால் தீயோர் எனத் தள்ளப்பட்டவர்களையும் பார்க்கலாம். இந்தத் தள்ளப்பட்ட பாவிகள் அந்த மகா குருவின் இரக்கத்தையும் அன்பையும் பார்த்து அவருடைய திருவடிகளில் நெருங்கி வந்து கேட்கத் துணிந்தார்கள். நாங்கள் யோக்கியர் என்று நினைத்தவர்கள் பாவிகள் அருகே உட்கார வெட்கினார்கள். ஆண்டவர் பாவிகளை ஏற்று அவர்களுடைய உள்ளம் மலரப் பேசினதைப் பார்த்து அவர்கள் ‘இவர் பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்’ என்று அவரை வெறுத்துத் தூஷித்தார்கள். அப்படித் தூஷித்தவர்களுக்கு ஒரு உவமை சொன்னார். அது கெட்டுப்போன வெகு அநேக ஆத்துமாக்களுக்கு இதுவரையில் ஆறுதல் அளித்து அவர்களைப் பாவத்திலிருந்து கைதூக்கியிருக்கிறது. அதற்குக் காணமற்போன ஆட்டின் உவமை என்று பெயர். அது வருமாறு:—

ஓர் இடையனுக்கு நூறு ஆடிருந்தன. அவற்றை அவன் மிகக் கவலையுடன் மேய்த்துவந்தான். ஒருநாள் அந்திப்பொழுதில் அவற்றைத் தொழத்திற்கு ஓட்டுகையில் ஒன்று காணமற்போயிற்று. மற்றவர்கள்: தொண்ணூற்று ஒன்பது நமக்கிருக்க இந்த ஒன்று குறைந்தால் கவையில்லை. இந்நேரத்திற்குள் அந்த மூட ஜந்து மலையேறி ஓடிப்போயிருக்கும், ஒருக்கால் நாய் நரி வாயில் அகப்பட்டு இறந்துபோயிருந்தாலும் இருக்கும். இப்போது இராநேரம், அதைத் தேட இது சமயமல்ல என்று சொல்லிச் சுகமாய்ப் படுத்து உறங்கியிருப்பார்கள்.

இந்த இடையன் தன் மந்தையைப் பத்திரமாய்த் தொழத்தில் அடைத்து சுகமாய்த் தூங்கவிட்டு, விழுங்க எது நேர்படும் என்று மனுஷ ஆத்தும விரோதி சுற்றித் திரிகிற இராவிருளை நோக்கிப் பார்த்தான். அந்நேரம் சாவுக்கு அணுகி ஈனச் சுரமாய்க் கத்தின தன் ஆட்டுக்குட்டியின் சத்தம் அவன் காதில் வந்து விழுந்தது. உடனே அவன் இரவையும் இருளையும் கவனியாமல் புறப்பட்டான். மலையேறி உச்சிக்கு வந்தான். தவறி விழுந்தால் பிராண மோசத்திற்குத் தடையில்லை. அங்கே அந்தக் குட்டி அகப்பட்டது. அதை மார்போடணைத்துக்கொண்டு அவன் விடியலில் வீடுவந்து சேர்ந்தான். அவன் தன் அக்கம்பக்கத்தியாரையும் அழைத்து அவர்களுடன் சந்தோஷப்பட்டான்.

இந்தக் கதையைப் பாவிகளுக்குத் தேவனிடத்தில் மன்னிப்புக் கிடைக்கும் என்கிற நிச்சயத்தை உணர்த்த நம் தோத்திரத்திற்குரிய ஆண்டவர் சொன்னார். அவர்கள் தேவனிடத்தில் அணுக எவ்வளவு பயங்கொண்டிருந்தார்கள் என்பது அவருக்குத் தெரியும். அதனால், இந்த அழகிய படத்தில் தேவனுடைய ஆச்சரியத்திற்குரிய மன்னிக்கிற அன்பை அவர்களுக்குக் காட்டினார். இதன் பொருள் சிலருக்கு விளங்காதிருக்குமாயின் அவர்

their Souls as the lost sheep did. And for them, too, there will be rejoicing in heaven when the Saviour brings them home.

But the main force of the Parable is directed towards the penitent sinner. Should there be anyone amongst us lost and alone, to such an one comes this message from the Master. It is a message of pardon, purity, and peace for you, dear sister—just as you are. It is the free and full forgiveness for all sin—cleansing from all its guilt, and perfect peace. Now may the God of peace, that brought again from the dead our Lord Jesus, that Great Shepherd of the sheep, through the blood of the everlasting Covenant, make you perfect in every good work to do His will, working in you that which is well pleasing in His sight, through Jesus Christ, to Whom be glory for ever and ever.

Needlework Patterns.

(From the "Girl's Own Paper.")

1.—A Simple Narrow Edging (Crochet).



FOR this design use Ardern's No. 40 cotton, and a No. 6 hook. Form 6 chain into a ring, 6 chain, 3 triple treble into the ring (thread three times over the needle), work off two loops at a time, retaining the last on the needle until the third is formed, finally drawing the thread through the four loops on the needle, 7 chain, 4 triple treble into the ring, five times more, 7 chain, 1 double crochet over first trebles, 5 chain, 1 treble into next chain, 5 chain, 1 treble into fourth chain, 5 chain, 1 treble into same chain, 5 chain, 1 treble over next trebles, 2 chain, 1 treble into same stitch as last, 5 chain, 1 treble into fourth chain, 5 chain, 1 treble over next trebles, 5 chain, 1 treble into same stitch as last, 5 chain, 1 treble into next fourth chain, 5 chain, 1 treble into chain before the trebles, 2 chain, 1 treble into the trebles, 5 chain, 1 treble into the fourth chain, 5 chain, 1 treble into same chain, 5 chain, 1 treble into next trebles, 2 chain, 1 treble into next chain, 5 chain, 1 treble into fourth chain, 5 chain, 1 treble into next trebles, 5 chain, 1 treble into same trebles, 5 chain, 1 treble into fourth chain, 5 chain, 1 double crochet into third chain of the first five, 5 double crochet over each 5 chain, and 3 double crochet over each 2 chain all round, with a 5 chain picot in the centre of the 5 chain spaces where there are 2 treble into the same stitch.

Each motif is joined to the preceding in the centre of a picot.

To fill in the spaces at top, working from left to right, join the thread to the first picot, 20 chain, form last eight into a ring, turn, *6 chain, 1 triple treble through the first of the chain, 1 double cro chet through loops on needle, 1 double crochet over second treble on motif, 6 chain, 1 triple treble through first chain, 1 double crochet through top, 3 double crochet into the ring, *repeat into the second next treble on this motif and into corresponding treble on side of next motif, 1 double crochet into the ring, 12 chain, 1

களும் தெள்ளுற அறியும்பொருட்டு, விளக்கமான சில வார்த்தைகள் சேர்த்துச் சொன்னர். அவை வருமாறு: 'மனந்திரும்புதல் வேண்டுவதில்லாத தொண்ணூற்றென்பது புண்ணியர்களைவிட மனந் திரும்புகிற ஒரே பாவியின்மேல் தேவலோகத்தில் சந்தோஷமிருக்கும்.

நாங்கள் பாவிகள் என்று மனம் நொந்திருந்தவர்கள் இதைக் கேட்டு எவ்வளவு பூரித்திருப்பார்கள்! அவர்களை வாழ்விழந்த கேடர் என்று இகழ்ந்தவர்கள் எவ்வளவு வெட்கியிருப்பார்கள். இவர்கள் பிறருடைய குற்றத்தையே பார்த்துத் தங்கள் பாவத்தைப் பார்க்கக் கண்ணில்லாமலும் அதைக் குறித்து மனஸ்தாபப்பட்டுச் சீரடையும் வரத்தை தேவனிடத்தில் கேட்டு வாங்காமலும் கெட்டார்கள். இந்தச் சரிதையில் மேட்டிமையினுல் மனக்கடினமாகி யிருப்போருக்கும் கிருபையுள்ள செய்தி வைத்திருக்கிருர். அப்பேர்ப்பட்டவர்கள் நம்முள் யாரேனும் இருந்தால் அவர்களுக்குத் தேவன் உண்மையான குணப்படுதல் அருளுவாராக. அதினுல் அவர்கள் தாங்களும் சீர்கெட்ட பாவிகளே என்பதை யறிந்து, தங்கள் ஆத்துமாக்களை மேய்க்கிறவரைப் பார்த்து அந்தக் காணுமற்போன ஆடு கத்தின விதமே அவர்களும் கத்தினுல் அவர்களை இரட்சகர் வீடு கொணர்ந்து சேர்ப்பார். அப்போது அவர்களுக்காகவும் தேவலோகத்தில் மகிழ் கொண்டாடல் இருக்கும்.

இந்த உவமை முக்கியமாய்ப் பாவ உணர்ச்சியடைந்திருக்கிறவளுக்குச் செல்லும். நம்முள் யாராவது பாவத்தைச் செய்து கெட்டுத் தம்மவர்களால் ஒதுக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கே நம் குரு இந்த நற்செய்தியைக் கூறுகிருர். பிரிய சகோதரியே, உனக்கு மன்னிப்பும், திரும்பச் சுத்தமாகுதலும், மனச் சமாதானமும் தருகிற இந்தச் செய்தியை உனக்கே என்று ஏற்றுக்கொள். நீ இப்போதிருக்கிற நிலை எவ்வளவு ஈன நிலையாயினும் அந்தச் செய்தி உனக்குச் செல்லும். அது நீ செய்துள்ள எல்லாப் பாவங்களுக்கும் மன்னிப்புத் தரும். அதாவது, உன் சகல குற்றத்திலுமிருந்து உன்னைக் கழுவிச் சுத்திசெய்து உன் மனப்புண்ணை ஆற்றி ஆரோக்கியம் தரும். இயேசு ஆகிய பெரிய ஆத்தும மேய்ப்பருடைய திரு இரத்தத்தினுல் என்றும் செல்லுகிற உடன்படிக்கையைப் பாவியுடன் செய்திருக்கிற தேவன் உனக்குத் தம் மனதிற்கேற்ற எல்லா நற்கிரியையும் செய்ய வரமளித்து உன்னைப் பரிபக்குவி ஆக்குவாராக. பாவிகளை இரட்சிக்கிற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு என்றென்றும் மகிமையுண்டாவதாக.

double crochet into picot on next motif, then repeat to the end.

Work a row of double crochet over the chain stitches, then make the straightening row of 2 chain, 1 treble into every third double crochet. Finish with a row of 2 double crochet into each space.

2.—A Knitted Scarf with Open-work Border.

Cast on 80 stitches. Knit plain for 16 rows. Then knit border as follows:—

First row, purl.

Second row, knit 1, *thread over needle, knit 2 together. Repeat from * ending with knit 1.

Third row, purl, knitting "thread over" in previous row as a stitch.

Fourth row, plain.

These 4 rows make 1 row of holes.

Repeat from the first row until you have 3 rows of holes. Now knit 16 rows plain. Then make another border of 3 rows of holes, after which knit 168 rows, or about 1 yard, for the body of the scarf. Finish the scarf with a border to correspond with the one at the beginning.

Make a fringe by tying 6 strands of wool into every other stitch on the narrow ends of the scarf.

The Garden of Souls.

(Concluded.)

IN the last chapter we read that Atma Devi brought the Prince into a beautiful garden and bid him behold.

But what a sight met his gaze! A small deformed creature was stumbling along one of the flowery paths, with a face and form so repulsive that the beholder shuddered at the sight. She looked up fearfully as she passed the prince and his guide, and then slunk away among the trees.

"What terrible creature is that," cried the prince, "who mars the beauty of this wonderful garden?"

"You know her well," answered Atma Devi, "that is the Princess Sundri of Sylvania."

The prince started back in dismay.

"You mock me!" he exclaimed, "there is no more beautiful creature than she under the sun!"

"You forget," replied Atma Devi, sadly, "this is the Garden of Souls. This wretched creature is the real Princess whom you have known and admired under the guise of earthly beauty, but here you perceive her in her true colours. Her scarlet head-dress indicates the pride of her heart; her yellow robe, brilliant in colour, though worn and frayed, shows the spiteful jealousy of her nature; her crooked and fearful appearance is her true self, unseen by earthly eyes. But enough, here comes another."

The figure who now appeared in sight was plucking at the flowers as she passed and throwing them away with a vacant laugh. And as she approached she gazed at the prince with an expressionless face, and darted by with a wild shout of meaningless glee.

The prince turned wonderingly to his companion.

ஆத்துமாக்களின் பூம்பொழில்

(உத்தர பாகம்)

இதற்கு முந்தின பூர்வ பாகத்தில் ஆத்தும தேவி அந்த இராஜபுதல்வனை ஒரு பூங்காவில் கொணர்ந்து அங்கு காட்சியாவனவற்றைப் பார்க்கச் சொன்னாள் என்று பார்த்தோம்.

எப்பேர்ப்பட்ட குரூபம் அவன் கண்ணுக்கு அகப்பட்டது! அந்தப் பூப்பொழிலில் வகுத்திருந்த ஒரு நடப்புபபாதையில் பார்க்க மிக அசங்கிதமான முகமும் கோர உருவமும் உள்ள கூனிக் குறைந்த ஒரு அவலட்சண ஜந்து தட்டித் தடுமாறி நகர்ந்துபோனது. அதைப் பார்த்ததும் அந்த அரசன் மகனுக்கு உடம்பு சிலிர்த்தது. அந்தப் பெண்-ஜந்து அவனோடும் அவன் தோழியையும் கண்டதும் வெருண்டு ஓடி புதருள் போய் ஒளிந்தது.

‘இந்த உன்னதக்காட்சியுள்ள தேன்பொழி வனத்தை சீர்குலைக்கவந்த இந்த பயங்கர ஜந்து என்ன?’ என்று அவன் கேட்டதும் ஆத்துமதேவி ‘அவளை உனக்குத் தெரியும். சில்வானியா தேசத்து சுந்தரி என்கிற இராஜபுதல்வி அவள்தான்’ என்று விடைபகர்ந்தாள். அவன் திடுக்கிட்டு ‘இதென்ன விளையாட்டு! சூரியன்கீழ் அப்பேர்ப்பட்ட கட்டழகியே கிடையாதே’ என்ன, அவள்: ‘இது ஆத்துமாக்கள் காட்சியாகும் பொழில் என்பதை மறந்தாய். தோல் அழகைக் கண்டு நீ மயங்கியிருந்த இராஜகுமாரி இவளே. இவ்விடத்தில் அவள் தன் யதாசுரூபத்தில் வெளிப்படுகிறாள். அவள் தலைக்கு அணிந்திருந்த பீதாம்பரம் அவள் உள்ளத்தின் செறுக்கைக்காட்டும் அறிகுறி. உடுத்து உடுத்து நிறம் மங்கியிருந்த பிலுக்கான அவளுடைய மஞ்சள்நிற மேலாடை பிறர் வாழ்வைப் பார்க்கச் சகியாமல் பழிவாங்குகிற அழுக்காறு என்றறி. கூனிக்குறைந்து பார்க்கப் பயங்கரமாயுள்ள தோற்றமே அவளுடைய சுயரூபம். அது புவியில் பூதக்கண் பார்வைக்குத் தோற்றமாகாது. இது நிற்கட்டும். இன்னொருத்தி வருகிறாள் பார்’ என்றாள்.

அப்பொழுது காட்சியானவள் பித்தங்கொண்டவள்போல வழியிலுள்ள அழகிய பூக்களைப் பறித்து; காரணமில்லாமல் நகைத்து மனம்போனபடி எறிந்துகொண்டே போனாள். அவள் கிட்டவந்ததும் அரசன் புதல்வனைப் பூர்த்து முகத்தில் அகத்தினழகு என்பதே தோற்றாமல் வெறிகொண்டவள்போல அவனை ஏற இறங்க நோக்கி, நிமித்தம் இல்லாத களிப்புப் பெருநகையுடன் ஓடிப் போய்விட்டாள். அதைப் பார்த்து ஆச்சரியவசத்தனாய் அவன் தன் தோழியை நோக்கி ‘இவளார்?’ என்ன, அவள் ‘இவளைத் தெரியக்கூடாமலிருக்கிறாயா? தன் வாய்ச்சமர்த்தாலும் புத்தியான அகசிய மொழிகளாலும் உன் உள்ளத்தை மருட்டினவள் இவள்தான். இங்கே அவளுடைய உண்மையான உருவத்தில் அவளைப் பார்க்கிறாய். யதார்த்தமான புத்திசாலித்தனமும் அழகும் அவளுக்கு இல்லை. அவளுடைய மூளை வெறும்பாண்டம். அவளுடைய மனது வெற்றோடு. அவள் அறிவு என்று பகட்டுகிறது இந்த ஆத்துமாக்களின் பூம்பொழில்மட்டும் வந்து சேராது’ என்றாள். ஆத்துமதேவி அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே மனதைப் பரவசமாக்கும் இனிய கானம் எழுந்துவந்தது. அடுத்த நொடியில் அந்தப் பூம்பொழில் நடப்புப்பாதையில் மெல்லென நடந்து ஒரு அழகிய மாது வந்தாள். அவளுடைய சுந்தர வதனமும் அன்னநடையும் காம்பீரத்தோற்றமும் அந்த இராஜபுதல்வனைக் கவர்ந்தன. அவன் அவளைக் கண்மாறாமல் பார்த்துக்கொண்டேயிருந்தான். இப்பேர்ப்பட்ட கட்டழகியை நான் என்றும் கண்டதில்லை என வியந்தான். சுந்தரியின் மேட்டிமையான அழகும் இவளுடைய பூவிலும் இனிய அழகுக்குமுன் எந்த மூலை என்று புகழ்ந்தான்.

ஆத்துமதேவி அவனைப் பார்த்து: ‘இவளே உத்தமி என்னும் ராஜபுத்திரி. அவள் அழைத்தவுடனே குருவிகள் அவள் கிட்ட வருகிறதையும் அவளைச் சூழ்ந்து இளங்காற்று வீசுவதையும் பூவரும்புகள் அவளுடைய ஸ்பரிசத்தினால் தலைநிமிர்ந்து மலர்வதையும் பார். உன் காதில் விழுந்த பாட்டு சதா அவளுடைய உள்ளத்திலிருக்கிற பாட்டு. அதின் கருத்து பூலோகமானிடனுக்கு விளங்காது. அவளுடைய முகத்தில் சிறிது துக்கக் குறியிருப்பின் அது ஆச்சரியமல்ல’ என்றாள்.

"Who is this?" he asked.

"Do you not know her?" responded Atma Devi, "she who has captivated your heart by her brilliant wit and clever sallies? This is her real self, devoid of all true knowledge and grace. Her brain is empty—her mind a blank. The knowledge that she possesses is not such as reaches to the Garden of Souls."

She had scarcely finished speaking when there came the sound of exquisite singing, and the next minute the prince's eyes rested on a beautiful figure, who tripped among the flowers with a light step. She was so fair, so dainty, and graceful, that the prince could not take his eyes off her. Never had he seen any one more lovely than this fairy-like creature. Even the Princess Sundri's haughty beauty could not compare with the sweet flower-like fairness of the being before him.

"This," said Atma Devi, "is the Princess Uttami. See how the birds come at her call, how the breezes play around her, how the very flowers lift their heads and blossom more perfectly as she passes! The song you heard her sing is the song always in her heart, which mortal man cannot understand. Sad? Well, perhaps her heart is a little sad sometimes, and what wonder?"

The prince watched every movement of the beautiful princess until she disappeared from view, and then, as the breezes wafted back a few sweet notes of the song, he turned to his guide. But she and her white-winged Fancy had vanished! He turned back to look once more at the garden, but that, too, had completely vanished as if it had never been. And then a darkness and gloom seemed to envelop him, and he found himself once more on the mossy ground, with his horse tethered to the tree beside him.

* * * *

As the sun rose in all his splendour, bathing the waking earth in a flood of crimson and gold, the Prince of Goldaland slowly wended his way back to the Royal Palace. As he entered the park he came upon the Princess Sundri resplendent in jewels and costly robes. She was surrounded by a bevy of beautiful maidens, some of whom were dancing before her, others were fanning her with perfumed fans, while others wound flowers in her golden hair. But the prince's thoughts were of a still fairer creature, and without so much as a glance towards her, he passed her by.

Further he was met by the Princess Tara, singing a favourite sonnet with much grace and charm. But a sweeter song sounded in his ears, and he continued his way unheeding.

At last, after having wandered through all the palace grounds, he found the Princess Uttami feeding her swans by the side of a lake.

The prince knelt humbly before her and kissed her hand.

"Fair Princess," he said, "the song of your heart has thrilled me, and the beauty of your soul surpasses all others. Come with me to my kingdom and be my bride."

* * * *

So the wedding was celebrated with much splendour, and there were great rejoicings in both the kingdoms.

And great was the happiness of the prince and his bride, for their days were spent in that sunshine of Love which brightens the Garden of Souls.

அந்த இராஜ பெண்மணி கண்ணுக்கு மறையும் மட்டும் அவளைப் பார்த்த வண்ணமாயிருந்து, அவள் பாட்டில் சில நறுங்கீத வாசைமட்டும் வந்தெட்டத் தொடங்கின சமயத்தில் இராஜபுத்திரன் தன் தோழியைப் பார்க்கத் திரும்பினான். அவளையும் காணான், அவளேறிவந்த புரவியையும் காணான். தானிருந்து மகிழ்ந்த தோட்டத்தை மறுபடியும் பார்க்கத் திரும்பினான். அதுவும் மாயமாய்ப்போயிற்று. இரவும் இருளும் அவனைச் சூழ்ந்திருந்தது. அவன் புல்தரையில் தான் படுத்திருந்ததையும் தன் பக்கத்திலிருந்த மரத்தில் தன் குதிரை கட்டியிருந்ததையும் கண்டான்.

* * * * *

சூரியன் தகதகப்பாய்ப் பிரகாசித்து எழும்பின நேரத்தில் கொல்டாலாந்தின் இராஜபுதல்வன் உறக்கம் தெளிந்து எழுந்து அரண்மனை நோக்கிப் போனான். இராஜ சிங்காரத் தோட்டத்தில் புகுந்ததும் பகட்டான உடையும் சோபிதமான ஆபரணங்களும் அணிந்து சுந்தரி என்கிற இராஜ புதல்வி எதிர்ப்பட்டாள். அழகிய தாதிகள் அவளைப் புடைசூழ்ந்து ஆடுவாரும் கவரி வீசுவாரும் மலர் தெளிப்பாருமாய் இருந்தார்கள். அவளைச் சிறிதும் எறிட்டுப் பாராமல் அரசன் மகன் நேரே சென்றான்.

சற்று அப்பால் தாரை என்னும் ராஜகுமாரி வந்தாள். கேட்க இனிமையாய் அவளொரு கீதம் பாடிக்கொண்டிருந்தாள். அவளுடைய பாட்டிலும் இனிய வேறொரு பாட்டு அவன் மனதிலிருந்ததால் அவளையும் சட்டைபண்ணாமல் போனான். அரண்மனைத்தோட்டம் எங்கும் சுற்றித் தேடி கடைசியாய், உத்தமி என்கிற இராஜபுத்திரியைக் கண்டான். அவள் ஒரு எரிக்கரையில் தன் அன்னப் பறவைகளுக்கு இரையூட்டிக்கொண்டிருந்தாள். அவளை நெருங்கி அதிவிநயத்துடன் அவளுடைய கையை முத்தமிட்டு: ‘அழகிய ராஜகுமாரத்தியே, உன் உள்ளத்தின் பாட்டு என் மனதை உருவிச் சென்றது. உன் அக அழகு ஒப்பில்லாத பேரழகு என்றறிந்தேன். தயவுசெய்து என் இராணியாகி என் இராச்சியத்திற்கு வர உன்னை வேண்டுகிறேன்’ என்றான்.

* * * * *

இரண்டு இராச்சியத்தாரும் மகோற்சவம் கொண்டாட அவ்விருவருக்கும் விவாகம் நிறைவேறினது. அந்தச் சதிபதிகள் இருவரும் ஆத்துமாக்களின் பூம்பொழிலில் வீசுகிற அன்பென்னும் ஒளியில் தம் வாழ்நாளைப் பெருமகிழ்ச்சியுடன் செலுத்தலானார்கள்.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912